1978 மார்ச் 10]

பாமணி உரமணி ஆலை, மன்னார்குடி.

*வினா 492.—திரு. மு. அம்பிகபாதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மன்னார்குடி அருகில் உள்ள பாமணி உரமணி ஆலையுடன் இணைந்த முறையில் பூச்சி மருந்து தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்ட முன்வடிவு உண்டா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: ஆம்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, பாமணி உரமணி ஆலைக்குப் பக்கத்தில் பூச்சி மருந்து தொழிற்சாலை ஒன்று துவங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா? (குறுக்கீடு) அதனை அமுல்படுத்துவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, சென்னை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ஒரு பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலையை மன்னார்குடிக்கருகிலுள்ள தனது பாமணி உரத்தொழிற்சாலையில் நிறுவ உத்தேசித்திருக்கிறது.

இந்திய அரசு பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலை நிறுவுவதைத் தடை செய்திருக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க சங்கங்கள் சிறிய நடுத்தர தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்திய அரசு தன் தடையைத் தளர்த்துவதற்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

திரு. எம். எம். ஏ. ரசாக்: மன்னார்குடியிலே அமைக்கப்பட்டதைப்போல, மற்ற மாவட்டங்களுக்கும் இந்தமாதிரி அமைக்க உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அது மன்னார்குடியிலே இந்த அரசு பெறுகிற வெற்றியைப் பொறுத்தது.